## இலங்கை றக்பி கால்பந்தாட்ட சங்கம் – 2017 ஆம் ஆண்டு

---

இலங்கை றக்பி கால்பந்தாட்ட சங்கத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 9 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற மீளாய்வாண்டின் சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவக் குழுவின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவக் குழு பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சங்கத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கிறாரேயன்றி சங்கத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை றக்பி கால்ப்பந்தாட்ட சங்கத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) போட்டி விதிகள் மற்றும் பிரமாணங்களை மீறியமை தொடர்பாக 2017 ஆம் ஆண்டில் சர்வதேச றக்பி சங்கத்தால் இலங்கை றக்பி சங்கத்திற்கு விதிக்கப்பட்ட தண்டப்பணம் தொடர்பாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 9 மில்லியன் தொகையில் ரூபா 8 மில்லியன் தொகை நிதிககூற்றுக்களில் நீண்டகால பொறுப்புக்களின் கீழ் காட்டப்படுவதற்குப் பதிலாக நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) விளையாட்டு போட்டிகளிற்குரிய வெளிநாட்டு பிரயாணங்கள் தொடர்பாக விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தால் இலங்கை றக்பி சங்கத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 11,318,090 தொகையான விமானச் சீட்டுக்களின் கிரயம் சங்கத்தின் வருமானம் மற்றும் செலவினங்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) விளையாட்டுத் துறை அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து விளையாட்டு உபகரணங்கள் மற்றும் விளையாட்டு அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக மீள்நிரப்பப்பட வேண்டிய ரூபா 5,294,445 தொகை மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாகாண றக்பி சங்கங்களிற்கு றக்பி விளையாட்டு அபிவிருத்திக்காக 2016 ஆம் ஆண்டின் போது பெறப்பட்டிருந்த ரூபா 1,358,962 தொகை மற்றும் 2017 ஆம் ஆண்டின் போது பெறப்பட்டிருந்த ரூபா 1,750,000 தொகையான முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்காததால் அவ் ஆண்டுகளின் விளையாட்டு அபிவிருத்தி செலவினங்கள் அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(உ) 2016 ஆம் ஆண்டிற்காக உலக றக்பி சங்கத்திடமிருந்து (World Rugby Union) பெறவேண்டிய பவுண் 40,000 தொகைக்காக மீளாய்வாண்டின் போது பணம் பெறப்பட்டிருந்ததன் காரணமாக ஏற்பட்டிருந்த ரூபா 596,085 தொகையான பரிமாற்ற நட்டம் முன்னைய ஆண்டின் விரிவான வருமானக் கூற்றில் மிகையிலிருந்து கழிப்பதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் வருமானச் செலவினக் கணக்கிற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது.

(ஊ) சர்வதேச றக்பி போட்டிகளிற்காக தேசிய பாடசாலை அணிகள் பங்குபற்றுவதற்காக இலங்கை றக்பி சங்கத்தால் செலவிடப்பட்ட ரூபா 17,492,313 தொகை நிதி நிலைமைக் கூற்றில் இலங்கை பாடசாலை றக்பி சங்கத்திடமிருந்து பெறவேண்டியவைகளாக காட்டப்படடிருந்தன. பாடசாலை றக்பி சங்கத்திடமிருந்து

பெறவேண்டியவைகளாக காட்டப்பட்டிருந்தன. பாடசாலை றக்பி சங்கத்திடமிருந்து கொடுப்பனவை உறுதிப்படுத்துவதற்காக எழுத்து மூல உடன்படிக்கையொன்று செய்துகொள்ளப்பட்டிருக்காததுடன் இத்தொகையை பெறவேண்டியதாக கருத்தில் கொள்வதற்கு சங்கம் எந்தவொரு எழுத்து மூல ஆவணத்தையும் கொண்டிருக்கவில்லை. இத்தொகையின் அறவிடும் தன்மை நிச்சயமற்றதாக காணப்படுகின்ற போதிலும் இது தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடெதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் விடயங்களிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | இலங்கை பாடசாலை றக்பி சங்கத்திடமிருந்து பெறவேண்டிய பணம் | 17,492,313 | மீதி உறுதிப்படுத்தல்கள் |
| (ஆ) | செலுத்த வேண்டிய மீதி | 3,107,747 | |
| (இ) | இறுதி இருப்பு | 4,229,913 | பௌதீக இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகள் |

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

ஏழு ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 218,533 தொகையான நான்கு பெறவேண்டிய மீதிகள் 2018 ஏப்ரல் 07 வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| அவதானிப்புக்கள்<br>சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| இலங்கை றக்பி அரசியலமைப்பின் 111 ஆம் பிரிவின் 1(ஆ) பந்தி | றக்பி விளையாட்டுக்கள் தொடர்பாக சர்வதேச றக்பி குழுவால் காலத்திற்கு காலம் விதிக்கப்படுகின்ற விதிகளிற்கு இணங்க செயற்பட வேண்டும். எனினும், அவ்விதிகள் மீறப்பட்டு இரண்டு தகைமையற்ற பிஜி (Fuji) தேசிய விளையாட்டு வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததன் காரணமாக உலக றக்பி சங்கத்தால் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பித்து 10 ஆண்டுகளினுள் செலுத்தப்பட வேண்டியதாக ரூபா 10 மில்லியன் (பவுண் 50,000) தண்டப்பணம் விதிக்கப்பட்டிருந்தது. |

### 2.2.5 விளைவற்ற இருப்பு

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட ரூபா 4,229,913 தொகையான கையிலுள்ள இருப்பில் உள்ளடங்கியுள்ள ரூபா 103,368 பெறுமதியான ஒன்பது வகையான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் விளையாட்டு அணிகலன்கள் (Sportswear) 2013 ஆம் ஆண்டிலிருந்து விளைவற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சங்கத்தின் நிதி விளைவுகள் ரூபா 14,559,671 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 5,694,619 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 20,254,290 ஆன வீழ்ச்சியொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டின் போது வருமானம் ரூபா 6,311,854 ஆல் அதிகரித்திருந்த போதிலும் நிர்வாக மற்றும் ஏனைய செயற்பாட்டு செலவினங்கள் ரூபா 28,071,269 ஆல் அதிகரித்தமை இவ் வீழ்ச்சிக்குப் பிரதானமாக பங்களித்திருந்தன.

### 3.2 பதவியணியினர் நிர்வாகம்

சங்கத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் காணப்படவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியின் போது அடையக்கூடிய இலக்குகள் மற்றும் நோக்கங்களை உள்ளடக்கிய செயல்நடவடிக்கைத் திட்டமொன்று 2017 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் சங்கத்திற்கான உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் சங்கத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) சொத்துக்கள் முகாமைத்துவம் | கொள்வனவு செய்யப்பட்ட நுகரக்கூடிய பொருட்கள் இருப்பு பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | (i) | கடன்பட்டோர் உறுதிப்படுத்தல் கடிங்கள் பெறப்பட்டிருக்கவில்லை. |
| | | (ii) | தாமதங்களின்றி பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய மீதிகள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | கணக்கீடு | (i) | வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | | (ii) | நிலையான சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வு சரியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | | (iii) | குத்தகை பொறுப்புக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | | (iv) | நாட்குறிப்பு பதிவுகளிற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | பெறுகை செயன்முறை | (i) | பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | | (ii) | பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | மதிப்பிடப்பட்ட தொகைகள் சரியானதாக காணப்படாமை. |
| | | (ii) | எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு இயலுமான வகையில் ஆண்டின் ஆரம்பத்தில் பாதீட்டு மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |